1982 பிப்ரவரி 15]

திரு. மு. அப்பாதுரை: எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் அதிகமாக உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் முதலாளிகள் உப்பை ஏற்றுமதி செய்து அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள். மேற்கு வங்க அரசு இந்த உப்பை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் தமிழக சர்க்காரே நேரடியாக இந்த உப்பை ஏற்றுமதி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்கனவே சொன்னது போல் 16,75,000 டன் உப்பு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப் படுகிறது. தமிழ் நாட்டில் உப்பு நிறுவனத்தின் சார்பாக உற்பத்தி செய்யப்படுகிற உப்பு அந்த நிறுவனத்தின் சார்பாக நேரடியாகவும், ஏஜண்டுகள் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்படு கிறது. தனியாரும் அதேபோன்று விற்பனை செய்து வருகிறார்கள். அரசே அனைத்தையும் ஏற்று வியாபாரம் செய்ய உத்தேசம் இல்லை.

தொழில் வளர்ச்சிக்குழு அமைக்கும் திட்டம்.

* வினா எண். 217—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக்குழு அமைக்க பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தொழில் ஆலோசனைக்குழு ஒன்று மாநில அளவில் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாநில தொழில் ஆலோசனைக் குழு அமைக்க குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனை விரைவாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி அமைக்கிறபோது அதில் யார் யார் அங்கம் வகிக்கும் நிலைமை ஏற்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் சில அதிகாரிகளையும் தனியார் துறையில் — அந்தந்தத் துறைகளுக்கு ஏற்ப, எடுத்துக் காட்டாக சிமின்ட் உற்பத்தி என்று வருகிறபோது சிமின்ட் தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர், அதேமாதிரி சர்க்கரை உற் பத்தி என்று வருகிறபோது சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர் — அந்த அந்தப் பிரிவுகளிலே முன்னணியிலே இருக்கின்ற தனியார்கள், தொழிலதிபர்கள் இதைத்தவிர டெக்னோகிராட்ஸ் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை — அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை அரசு தெரிந்து கொள்வதற்காகவும் தொழில் அபிவிருத்திக்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசு புரிந்து கொள்வதற் காகவும் —வெகு விரைவில் சுமார் 20 பேர்களுக்கு மேற்படாத அளவில் ஒரு குழுவை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, மாநில அளவிலே தொழில் வளர்ச்சியைக் கண்டறிவதற்காக ஒரு குழுவை அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று மாவட்டங்களிலேயும் அத்தகைய குழுக்களை அமைத்து தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே குழுவை அமைக்கிறபோது பல் வேறு மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் அதிலே இடம் பெறுவார்கள். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர், டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் சென்டர்களின் மானேஜர்கள் இவர்களையெல்லாம் அழைத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் அருமை அண்ணன் திரு. கே. ஏ. கே. அவர்களும் நானும் இதுபோன்ற ஆலோசனைக் கூட்டங்களைக் கூட்டி தொழில் முனைவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக் கிறோம்.

படித்து பதிவு செய்து வேலைவாய்ப்பு நிவாரணத்திற்குக் காத்திருக்கும் காலத்தைக் குறைக்கும் திட்டம்.

* வினா எண். 218 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து வேலையில்லாமலிருக்கும் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் பதிவு செய்திருக்கும் காலத்தை 5 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கக் கோரி விண்ணப்பம் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம். 1981 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், மதுரை கிளை ஒரு மனு கொடுத்தது. வேலைவாய்ப்பு நிவாரணத் திற்கு காத்திருக்கும் காலத்தினை 5 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டு களாகக் குறைப்பது அதில் உள்ள கோரிக்கைகளில் ஒன்றாகும்.

(ஆ) இத் திட்டம் இப்பொழுதுதான் செயல்படுத்தப்பட்டு வருவதால் அந்தக் கோரிக்கை மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது வாலிபர் சங்கத்தின் மூலமாக கோரிக்கை வரப்பெற்றதாகவும் பரிசீலிப்ப தாகவும் சொன்னார்கள். படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அரசு அறிவித்ததற்கு இணங்க இதுவரையில் எத்தனை பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?